# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

## புத்தசாசனம், மதங்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சு


# இலங்கை தேசிய சினிமா கவுன்சிலை நிறுவுவதற்காக புதிய சட்டத்தை தயாரிப்பதற்கு இயைபாக சினிமா துறையில் உள்ள தரப்பினரிடமிருந்து (Stake Holders) கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளைக் கோருதல்

1971ஆம் வருடத்தின் 47ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனச் சட்டத்தை அப்புறப்படுத்தி சினிமா ஒழுங்குமுறை மற்றும் சினிமா கலாசாரத்தை மேம்படுத்துதல் எனும் இரு கடமைப் பொறுப்புகளை மேற்கொள்வுவதற்காக இலங்கை தேசிய சினிமா கவுன்சிலை நிறுவ முடியுமான வகையில் விதிமுறைகளை உள்ளடக்கி புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 1980ஆம் வருடத்தின் 45ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971ஆம் வருடத்தின் 47ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன சட்டத்தை அப்புறப்படுத்துதல் மற்றும் இலங்கை தேசிய சினிமா கவுன்சிலை நிறுவதற்கு இயைபாக புதிய சட்டத்தைத் தயாரிப்பதற்கு சினிமா துறையில் உள்ள தரப்பினரிடமிருந்து (Stake Holders) கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. இதன்போது தற்போது உள்ள தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன சட்டத்திற்கு உள்ளாகாத வகையில் துறை தொடர்பில் மூலோபாய வழிமுறைகளை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஒழுங்குமுறை துறை

இதன்போது, திரைப்பட பதிவு / திரைப்பட உற்பத்தி அல்லது இயக்க வழிகாட்டல்களை வழங்குதல் / திரைப்பட நிறுவனம் / திரைப்பட விநியோகம் / திரைப்பட நிறுவனம் / சினிமா புரஜெக்டர் முறை / திரையரங்கை வகைப்படுத்துதல் / பொழுதுபோக்கு வரி / திரைப்பட தொகுப்பு / சினிமா கலாசார மேம்பாடு / சர்வதேச சினிமா கல்வி / சினிமா நிதியம் / இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு படப்பிடிப்பு ஒழுங்குமுறை / சர்வதேச சினிமா விழா பிரதிநிதித்துவம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் புதிய சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறையை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை அனுப்புதல்

மேற்கூறிய இலங்கை தேசிய சினிமா கவுன்சிலை நிறுவுவதற்கு இயைபான புதிய சட்ட வரைவை சபைக்கு சமர்ப்பிப்பதற்காக சினிமா தொழில்துறைக்கு செயல்நிலை பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக உங்கள் நிறுவனத்தின் / மன்றத்தின் கருத்துகள் / முன்மொழிவுகளை பின்வரும் வழிமுறைகளின் ஊடாக 2026 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் அனுப்புங்கள்.

- தபால் மூலம் அனுப்புதல்
  தபால் மூலம் அனுப்புவதானால் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை சினிமா கவுன்சிலை நிறுவுவதற்கு இயைபான கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளைக் கோருதல்'' எனக் குறிப்பிட்டு பின்வரும் வரிசைக்கிரமத்தின் பிரகாரம் தகவல்களை அனுப்பவும்.

  01. நிறுவனம் / மன்றம் / நபரின் பெயர், 02. முகவரி, 03. மின்னஞ்சல் முகவரி, 04. தொலைபேசி இலக்கம், 05. தொடர்புடைய துறை, 06. உங்களது கருத்துகள்/ முன்மொழிவுகள், 07. முன்மொழிவை நியாயப்படுத்தல், 08. திகதி மற்றும் கையொப்பம்.

- மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் - https://forms.gle/ZfRzvzj1KciuAuZA9


எமது முகவரி:
தலைவர், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு -07.